கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30


# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com

ஞானம் 5 - ஒலி 47 | 20-11-2022





## மானமிகு பனகல் ராஜா

## வீழ்வோமென்று நினைத்தாயாடா? எங்ககிட்டேயேவா...

தலையங்கம்






# சமூக சீர்திருத்தவாதி பனகல் ராஜா வாழ்க.. வாழ்கவே...

அருட்பணி. **சைமன் பீட்டர்**

அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் என் இதயப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம் மீட்பர் இயேசுவே உங்கள் அனைவருக்கும் வாழ்வாகவும், வாழ்வின் பாதையாகவும், அந்தப் பாதைக்கு வெளிச்சமாகவும் இருப்பாராக. வாழ்க நலமுடன், வளமுடன்.

இன்று நாம் வாழும் இந்த உலகமும், நமது வாழ்வின் கலாச்சாரம், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் அனைத்தும் நமது முன்னோர்களின் கடின உழைப்பாலும், பங்களிப்பாலும் உருவானது என்பதை மறக்கக்கூடாது.

அதைத்தான் நாம் பாரம்பரியம் என்று சொல்கின்றோம். நன்றியுடைய எந்த ஒருவரும், கடந்த காலத்தின் பங்களிப்பை மறக்கமாட்டார்கள். எதுவும் ஒன்றோடொன்று இணைந்துள்ளது.

நமது உணவு, உடை, உறவுகள், நட்பு, ஆன்மீகம், கல்வி, கலை, ஒழுக்கங்கங்கள், சமூக நடைமுறைகள், அனைத்தும் நம்மீது அக்கறை கொண்ட நமது முன்னோர்களின் பங்களிப்பு என்பதை நாம் நன்றியோடு நினைவில் கொண்டு அவர்களின் நோக்கத்தையும், கற்றுத்தந்த வாழ்க்கை முறையையும் கட்டிக் காப்போம்.

இன்று மருத்துவக் கல்வியில் நடக்கும் மக்கள் விரோத நடைமுறைகளக் கண்டு, மக்களிடையே, முக்கியமாக சமூக நல்லணக்கக் கோட்பாட்டின்மீது பற்று கொண்டுள்ள தமிழகத்தில் எவ்வளவு கோபமும், எதிர்ப்பும் உள்ளது என்பதை நாம் அறிவோம்.

சுமார் 80 வருடங்களுக்கு முன்னால், ஒருவர் மருத்துவராக வேண்டுமென்றால், அவர்களுக்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற விதி இருந்தது. அதனால் ஏழை எளிய, அடித்தட்டு மக்களுக்கு மருத்தவக் கல்வி எட்டாக் கனியாகவே இருந்தது.

சமஸ்கிருதம் தெரியாதவர்கள் யாரும் இத்துறைக்கு வந்துவிடக் கூடாது என்ற சதி மேல்தட்டு பிரிவினரால் கடைப்பிடிக்கப்பட்டது.

அதாவது சூழ்ச்சியாலும், அபகரிப்பினாலும், இந்தியாவின் அனைத்து வாழ்வியல் முறைகளையும் தன்வயப்படுத்தியதோடு நில்லாமல், ஒண்டவந்த கூட்டம்,ஆங்கிலேயருக்கு அடுத்ததாக ஆளும் வர்க்கமாக இந்திய மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே மருத்துவக் கல்வி ஏகபோக சொத்தாக மாற்றிவிட்டார்கள்.

அவர்களின் கொடுமைகளுக்கு முற்றுபுள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் பார்ப்பனரல்லாதவர்களின் நலன் காக்க நீதிக் கட்சி தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டது. அந்த நீதிக்

கட்சியின் சார்பாகத்தான் சென்னை மாகாணத்தின் முதல்வராக பனகல் அரசர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரும் மிகச் சிறப்பாக சென்னை மாகாணத்தை வழி நடத்தி வந்தார்.

இனிதான் மிக முக்கியமான செய்தி தொடரப்போகின்றது.... தொடர்ந்து படியுங்கள்... சுவாரஸ்மாக இருக்கும்....

சுமார் 80 ஆண்டுகளுக்கு முன் மதுரையில் சமஸ்கிருத மாநாட்டை பிராமணர்கள் நடத்தினார்கள்.

அந்த மாநாட்டிற்கு அன்றைய சென்னை மாகாண முதல்வராக இருந்த பனகல் அரசரை சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தார்கள்.

அவரை மாநாட்டிற்கு அழைத்த பார்ப்பனர்கள், திட்டமிட்டபடி அனைவரும் சமஸ்கிருதத்திலேயே பேசினர். அதற்குக் காரணம் பனகல் அரசருக்கு சமஸ்கிருதம் தெரியாது. பனகல் அரசருக்கு அம்மாநாட்டில பேசும் எதுவும் அவருக்குத் தெரியக்கூடாது என்பதற்காக அனைவரும் தமிழில் பேசவில்லை.

மேலும், அவர்கள் சமஸ்கிருதத்தில் பேசும்போது பனகல் அரசருக்கு கடுப்பேற்றும் வகையில் கிண்டலும், கேலியுமாகவே பேசினார்கள். அனைவரும் அந்தப் பேச்சைக் கேட்டு கைகொட்டி சிரித்தார்கள். அந்த சொற்பொழிவுகளை அரசர் அவர்கள் எந்தவித சலனமுமின்றி அமைதியாகவே கேட்டுக்கொண்டே இருந்தார்.

அம்மாநாட்டின் அறிவிப்பாளர், இம்மாநாட்டின் நிறைவாக முதல்வர் அவர்கள் உரையாற்றுவார் என்று அறிவித்தார்.

அங்கிருந்தோர், அனைவரும் இப்போது முதல்வர் தமிழில் பேசுவாரா? இல்லை சமஸ்கிருதத்தில் பேசுவாரா? என்று எதிர்ப்பார்த்தார்கள். அவருக்கு சமஸ்கிருதம் தெரியாததால், நான் தமிழில் பேசுகின்றேன் என்று சொல்வார் என்று எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால்....

முதல்வர் அவர்கள், மிகத் தெளிவான, மற்றவர் பேசியதைவிட மிக அழகான, உயர்ந்த சமஸ்கிருதத்தில் பேசினார். அங்கிருந்தோர் அனைவரும் பேயறைந்தது போல, வெட்கப்பட்டுப் போனார்கள். ஏனென்றால், அவர்கள் கூட முதல்வர் பேசியதைப்போல சமஸ்கிருத்தை அவ்வளவு சிறப்பாக பேசத் திராணியற்றவராய் இருந்தார்கள்.

அதன் பிறகுதான், பனகல் அரசர், சமஸ்கிருதத்தில் எம்.ஏ பட்டம் பெற்றவர் என்று தெரியவந்த பிறகு. அவர்கள் அவமானத்தில் கூனிக்குறுகிப் போனார்கள்.

பனகர் அரசர் இன்னொன்றையும் செய்தார். தொடர்ந்து படியுங்கள்.

அந்த மாநாடு முடிந்த சில நாட்களுக்குள் அவர் ஓர் முக்கிய அரசாணையை வெளியிட்டார். அது மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வில் இனி சமஸ்கிருதம் தேவையில்லை என்பதுதான் அந்த உத்தரவு.

அதோடு அனைத்துக் கல்லூரிகளிலும் பிராமணரல்லாத மாணவர்களை சேர்ப்பதற்கான குழுக்களை அமைத்தார். அதனால் அடித்தட்டு மக்களின் பிள்ளைகள் கல்வியைப் பெறுவதற்கான வழிகளைச் சுலபமாக்கினார்.

ஆங்கிலத்தில் மருத்துவக் கல்விக்கு சமஸ்கிருதம் தேவையில்லை என்பதுதான் அவரின் இந்த முடிவுக்குக் காரணம்.

மனித நேயமற்றவன், உயர்ந்த பிறகு அந்த இடத்திற்கு வேறு எவனும் வரக்கூடாது என்றே நினைப்பான். அப்படியும் யாராவது அந்த இடத்திற்கு வரமுயற்சி செய்பவனையும் தடுக்க எல்லா தகிடுதத்தங்களையும் செய்வான்.

ஒண்ட வந்த பிடாரி, ஊர்ப்பிடாரியை தொரத்தும் கதைதான் இது.

பார்ப்பனர்களுக்கு அறிவு கொஞ்சம் ஜாஸ்தி, ஆகவே, அவர்கள் மட்டுமே மருத்தவராக தகுதி படைத்தவர்கள். அதனால்தான் அனைத்துக் கூட்டுக் களவாணிகள், தங்களைத்தவிர மற்ற மக்கள் அனைவருக்கும் மருத்துவக் கல்வி கிடைக்காமல் செய்திருந்தார்கள்.

அத்தகைய ஊரைக் கெடுப்பவர்களின் வாலை ஒட்ட நறுக்கவே பனகல் அரசர் போன்றவர்கள் நிறைந்த நீதிக்கட்சி இப்படிப்பட்ட முன்னெடுப்புகளை எடுத்தது. அதற்காக அவர்களுக்கு கைகூப்பி நன்றி கூறுவோம்.

இப்படிப்பட்ட முடிவால், மருத்துவக் கல்வியின் தரம் மிகவும் கெட்டுவிடும் என்று பார்ப்பனர்கள் அலறினார்கள். ஆனால் பனகல் அரசர் அவர்கள் தான் எடுத்த முடிவில் உறுதியாக இருந்தார்.

அவரது அந்த உறுதியினால்தான் தமிழகத்தில் இருந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள்

நிறையபேர் மருத்தவக் கல்லூரியில் சேர்ந்தார்கள். மருத்தவரானார்கள்.

அதன் விளைவாகத்தான் அகில உலகளவில் பேரும் புகழும் பெற்ற மிகச் சிறந்த மருத்துவர்களைக் கொண்ட நகரமாக இன்று சென்னை விளங்குகின்றது.

வெளிநாட்டினர்கூட இதய அறுவை சிகிச்சை பெற சென்னை வருகின்றனர். ஏனென்றால், தரமான மருத்துவம், குறைந்த மருத்துவச் செலவுகள் இங்குதான் உள்ளது என்பது எவ்வளவு பெரிய பெருமை.

திரு.செரியன், திரு.சாலமன் விக்டர் போன்ற உலகப் புகழ் பெற்ற மருத்துவர்கள் உருவாவதற்கு பனகல் அரசரின் அந்த மக்கள் நல உத்தரவுதான் காரணம் என்றால் அது மிகையாகாது.

இன்று SC, ST, BC, MBC, வகுப்பைச் சேர்ந்தவர்கள் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் மருத்துவம் படிக்க இந்த வாய்ப்பு மாபெரும் சமூகப் புரட்சியைச் செய்துள்ளது.

அதைவிட இன்னொரு மாபெரும் புரட்சிகரமான திட்டத்தையும் அவர் அறிமுகப்படுத்தினார். அன்றைய காலத்தில் அனைத்துக் கோவில்களையும் பிராமணர்களே தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். அதுவும் கோவில் சொத்துக்களைக் கொள்ளையிடும் கூட்டமாக அவர்கள் இருந்தார்கள். அதற்கான இன்றைய சாட்சி, சிதம்பரம் நடராஜர் கோவில் பிரட்சினையை உதாரணமாகக் காட்டலாம்.

காசு இருந்தாத்தான இப்படி கொட்டமடிப்ப, இரு அதுக்கு ஒரு வழிபண்றேன் என்று நினைத்தாரோ இல்லையோ, அரசாங்கத்தின் அறநிலையத் துறையை ஆரம்பித்து அனைத்துக் கோவில்களையும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

இது எப்படி இருக்கு.

மதுரை சமஸ்கிருத மாநாட்டில், பனகல் அரசரைக் கிண்டல் செய்து கைதட்டி கொக்கரித்தவர்களுக்கு, எதிர்காலத்தில் அரசர் தங்களுக்கு இப்படியெல்லாம் ஆப்பு வைப்பார் என்று அவர்களே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். வினை விதைத்தவன் அறுவடை செய்யாமல் இருக்க முடியாது.

அவர்கள் தங்களுக்காக சிந்தித்தார்கள். மக்கள் தலைவர்கள் மக்களுக்காகத்தான் சிந்திப்பார்கள். அவர்களால்தான் இன்றைய தமிழகம் உள்ளது. அவர்கள் அனைவருக்கும் நன்றிகள் கூறுவோம்.


ஆனால், மீண்டும் இந்த இனம் உயர்ந்துவிடக் கூடாது என்பதற்காக, நீட் என்ற அரக்கனை உலாவ விட்டிருக்கின்றார்கள். இந்த நரகாசரன் எத்தனை மாணவர்களை காவு வாங்கியுள்ளான் என்பதை நாம் அறிவோம். நீட்டின் இரத்த வேட்டைக்கு முடிவு கட்டியே ஆகவேண்டும்.

பனகல் அரசரைப் போன்று இந்த அரக்கனை முற்றிலுமாக ஒழிக்க நாம் அனைவரும் உழைக்க வேண்டும்.

பனகல் அரசர், நமக்காகச் சிந்தித்து செயல்பட்டார். இன்று நமது எதிர்காலச் சந்ததிகாகாக நாம் ஒன்றுபட்டு சிந்தித்துச் செயல்படுவோம்.

தமிழன்னை வாழ்க. வாழ்கவே.

The King of Panagal had formed the Hindu Religious Endowment Board and converted the temples, which were the hunting ground of the Brahmins, for the use of the people. He had established a "Students Selection Board" in each college for admissions of non-Brahmin students. This board played a pivotal role in instilling the right to education of the Scheduled Castes and Backward Castes.



Raja Sir Panaganti Ramarayaningar served as a
Chief Minister of Madras 11 July 1921
3 December 1926



# விவிலியம் அறிவோம் - 65



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## அமலேக்கியர்களுடன் நடந்தபோர்

விப 17:8-17 வரையுள்ள சொற்றொடர்கள் அமலேக்கியர்களுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையில் நடந்தபோரைக் குறிப்பிடுகின்றன. அமலேக்கியர்கள் ஏசாவின் வழிமரபில் வந்தவர்கள் (தொநூ 36:15); நாடோடிகளாக சீனாய் தீபகற்பம் மற்றும் பாலஸ்தீனாவின் தெற்குப் பகுதியில் வாழ்ந்தாரகள். இதனால் இஸ்ரயேல் மக்களுடன் அவர்களுக்குத் தொடர்பு இருந்தது. இஸ்ரயேலில் மன்னராட்சி தொடங்குவதற்குமுன் அமலேக்கியர்களுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையில் நல்லுறவு இருந்தது. இஸ்ரயேலின் முடியாட்சி தொடங்கியபின் நிலப்பரப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அமலேக்கியர்களுடன் மோதல்கள் வருகின்றன (1 சாமு 15:6-7; 27:8-9; 30:1-2; 2 சாமு 8:12). இந்த மோதல்கள் பெரியதாகி அமலேக்கியர்கள் இஸ்ரயேலின் பகைவர்களாக மாறுகிறார்கள். அந்தப் பகைமையின் பிரதிபலிப்பாகத்தான் இந்தப் பாடம் உள்ளது. இவர்கள்தான் முதல்முதலில் ஒட்டகத்தை வீடுகளில் வளர்த்துப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். ஒட்டகங்களை வணிகத்திற்காகவும் எதிரிகளின் நகரங்களைக் கொள்ளையடிக்கவும் அவர்கள் பயன்படுத்தினார்கள். அமலேக்கியர்கள் ஏன் இஸ்ரயேலருக்கு எதிராகப் போரிட்டார்கள் என்பது குறிப்பிடப்படவில்லை. விவிலியத்தை வாசிக்கும்போது அவர்கள் இரபிதீமில் மட்டுமல்ல ஏறக்குறைய ஒரு ஆண்டிற்குப் பிறகு இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழையமுற்பட்டபோது மீண்டும் ஓர்மா என்ற இடத்தில் அவர்களைத் தாக்கியதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது; கானான் நாட்டின் தெற்குப் பகுதியிலிருந்து இஸ்ரயேலரை அமலேக்கியர்கள் விரட்டியடித்தார்கள் (காண் எண் 14:43-45).

அமலேக்கியர்களுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையில் நடந்த போர் மிகவும் சுருக்கமாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இதுவே இஸ்ரயேல் மக்கள் நடத்திய முதல் போர். எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த அவர்கள் போர் செய்வதில் பழக்கமில்லாதவர்கள். அமலேக்கியர்கள் அவர்களுக்கு எதிராகப் போருக்கு வந்தது அவர்களுக்கு அதிர்ச்சியளிக்கும் ஒன்றாகத்தான் இருந்திருக்கவேண்டும். மோசே யோசுவாவிடம் போருக்காக ஆள்களைத் தேர்ந்தெடுத்துத் தயாரிக்கக் கூறுகிறார். விவிலியத்தில் முதல்முதலாக யோசுவா என்ற பெயர் வருகிறது. இந்த யோசுவா யார்? வி.ப 33:11இல் யோசுவா மோசேயின் உதவியாளர் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். யோசுவா ஆற்றல் கொண்டவராக, தற்காப்புக் கலைகளில் தேர்ந்தவராக இருந்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது. மோசே யோசுவாவை போரைத் தலைமையேற்று நடத்தக் கூறுகிறார். மேலும், நான் கடவுளின் கோலைக் கையில் பிடித்தவாறு குன்றின் உச்சியில் நின்றுகொள்வேன் எனத் தனது பங்களிப்பையும் பற்றிக் கூறுகிறார். அமலேக்கியர்களுக்கு எதிரான போர் அடுத்த நாள் தொடங்குகிறது. இஸ்ரயேல் மக்களுக்கு ஏன் இந்த ஒரு நாள் கொடுக்கப்படுகிறது? என்ற கேள்வி எழுகிறது. இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து வரும்போது எகிப்தியரிடமிருந்து பெற்ற பொன், வெள்ளி நகைகளுடனும், மந்தைகளுடனும் வருகின்றனர். அமலேக்கியர்கள் இவைகளைக் கொள்ளையிடுவதற்காக வந்திருக்கலாம். ஒரு நாளில் இஸ்ரயேலர் அனைத்தையும் அவர்களிடம் ஒப்படைக்கவேண்டும். இல்லையேல் போரிடத் தயாராகுங்கள் என அவர்கள் கூறியிருக்கலாம். இஸ்ரயேல் மக்களை வழி நடத்தி வந்த மோசே அமலேக்கியர்களுடன் போரிடுவதற்கு முடிவெடுக்கின்றார். எனவே யோசுவாவுடன் அமலேக்கியரை எதிர்த்துப் போரிடத் தயாராகும்படி கட்டளையிடுகின்றார்.

ஒரு நாளில் போருக்கு ஆள்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். யாரைத் தேர்ந்தெடுப்பது? எத்தனை பேரைத் தேர்ந்தெடுப்பது? போன்ற கேள்விகள் யோசுவாவுக்கு எழுந்திருக்கலாம். மேலும், எகிப்திலிருந்து வெளியேறி வருகின்ற வழியிலே அவர்கள் ஆயுதங்களை உருவாக்கவோ, ஆயுதங்களை சேகரிக்கவோ வாய்ப்பில்லை. அவர்களுக்கு மாறாக அமலேக்கியர்கள் அப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள்; கொள்ளையடிப்பதற்காக வந்த அவர்கள் நிச்சயமாக ஆயுதங்களுடன்தான்

வந்திருப்பார்கள். இந்தச் சூழலில் ஒருநாளிலேயே ஆள்களைத் திரட்டி, அவர்களைப் போருக்குத் தயாரிப்பதென்பது மிகவும் கடினமான செயல். யோசுவா மோசேயிடம் நம்பிக்கை வைத்துதான் மோசேயின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். யோசுவா போருக்காகத் தயாரிக்கும் வேளையில் மோசே, ஆரோன், கூர் ஆகியோர் குன்றின் உச்சிக்கு ஏறிச்செல்கின்றனர். ஆரோன் மோசேயின் சகோதரர் என்பது நமக்கு ஏற்கனவே தெரியும். கடவுளால் மோசேயின் இறைவாக்கினராகத் தேர்ந்து கொள்ளப்பட்டவர். ஆனால் யார் இந்த கூர்? என்ற கேள்வி எழுகிறது. இவர் இஸ்ரயேல் மக்களின் ஒரு தலைவர், மோசேயுடன் இணைந்து மக்களுக்கு நீதி வழங்க உதவியவர் என்பது விப 24:14 லிருந்து தெரிய வருகிறது. வரலாற்று அறிஞர் யோசேப்புஸின் கருத்துப்படி கூர் மோசேயின் சகோதரியான மிரியத்தின் கணவர். ஆனால் இதற்கான வேறு சான்றுகள் எதுவுமில்லை.

மோசே தன் கைகளில் கடவுளின் கோலை ஏந்தி குன்றின் உச்சியில் அமர்கின்றார். இந்தக் குன்றின் பெயரும் நமக்குக் கூறப்படவில்லை. சீனாய் பாலைவனத்தில் ஏராளமான குன்றுகள் இருந்தன. மோசே ஏறிச்சென்ற குன்று இரதீபீம் பக்கத்தில் இருக்கவேண்டும். போர் நடக்கையில் போர் வீரர்கள் மோசேவைப் பார்க்கும் தூரத்தில் அந்தக் குன்று இருந்திருக்கவேண்டும்.மோசே கடவுளின் கோலை கையில் ஏந்தியவராக கைகளை உயர்த்தி வைத்திருப்பதை இரண்டு கோணங்களிலிருந்து புரிந்துகொள்ளலாம். முதலாவது, மோசேயின் செயல் கடவுளின் உடனிருப்பை, அவரது பிரசன்னத்தை போரில் ஈடுபடுபவர்களுக்கு உணர்த்துகின்ற ஒரு செயல்குறியாக இருக்கலாம். போரின்போது பலவிதமான செயல் குறிகளைப் போர் வீரர்கள் செய்வது வழக்கம். மோசே கடவுளின் கோலை ஒரு செயல்குறியாகப் பயன்படுத்தியிருக்கலாம். மோசே தம் கையை உயர்த்தியிருக்கும்போதெல்லாம் இஸ்ரயேலர் வெற்றியடைந்தனர்; அவர் தம் கையைத் தளரவிட்டபோதெல்லாம் அமலேக்கியர் வெற்றியடைந்தனர் என வாசிக்கிறோம். கடவுளுடைய கோலுடன் மோசேயின் கை உயர்ந்திருப்பதைப் பார்க்கும் போதெல்லாம் கடவுள் அவர்களோடு இருப்பதாக எண்ணிக்கொண்டு இஸ்ரயேல் படைவீரர்கள் போரிடுகின்றனர்; எனவே வெற்றி பெறுகின்றனர். கடவுளின் கோலை உயர்த்திப் பிடித்திருக்கும் மோசேயின் கைகள்தான் அவர்களுக்கு ஆயுதமாகப் பயன்படுகிறது.

மோசேயின் கைகள் தளரும்போது இஸ்ரயேல் படைவீரர்கள் கடவுளின் உதவி அவர்களுடன் இல்லை என நினைக்கிறார்கள்; எனவே ஆயுதங்கள் தாங்கிப் போரிடுகின்ற அமலேக்கியர் வெற்றி பெறுகின்றனர். வேறு கோணத்திலிருந்து மோசே, ஆரோன் மற்றும் கூர் ஆகியோரின் செயலைப் பார்த்தால் மோசே கடவுளின் கோலுடன் கைகளை உயர்த்தியருப்பது கடவுளிடம் வேண்டுவதாகக் கருதலாம். ஆயுதங்கள் இல்லாமல், போர்ப் பயிற்சிகள் எதுவும் இல்லாமல் அமலேக்கியர்களுடன் போரிட்டு வெற்றி பெறுவதற்கு கடவுளின் அருள் தேவை. இதை உணர்ந்தவராக மோசே குன்றின்மீது ஏறி கடவுளிடம் வேண்டுகிறார். ஆரோனும் கூரும் மோசேக்கு உதவியாக இருந்து அவர் கடவுளிடம் தொடர்ந்து வேண்டுவதற்கு உதவுகின்றனர். கைகளை உயர்த்துவது கடவுளிடம் வேண்டுவதற்கான ஒரு அடையாளம். கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டுதலின் அவசியத்தை உணர்த்துவதாகவும் இது உள்ளது. மோசே வேண்டுதலில் நிலைத்திருக்கும்போது இஸ்ரயேலர் வெற்றி பெறுகின்றனர்; அவர் வேண்டுதலில் தளர்ச்சியுறும்போது இஸ்ரயேலர் தோல்வியடைகின்றனர். மோசேயின் மனஉறுதியும், விடாப்பிடியானதன்மையும் இறுதியில் இஸ்ரயேலர் வெற்றி பெற உதவுகிறது.

அமலேக்கியருக்கு எதிராக இரதிபிம் என்ற இடத்தில் நடக்கின்ற போர்தான் இஸ்ரயேலர்களின் முதல் போர் எனப் பார்த்தோம். அடிமைகளாக வாழ்ந்த அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து வெளியேறிய சில நாள்களிலேயே பெரியதொரு போரில் வெற்றி பெறுவதென்பது சாத்தியமில்லாதது. கடவுளால்தான் இஸ்ரயேலர் இந்த வெற்றியைப் பெறுகின்றனர். எகிப்திலிருந்து வெளியேறிய அவர்களை கடவுள்தான் வழிநடத்தி வருகின்றார். மோசே கடவுளின் பிரதிநிதியாகச் செயல்படுகின்றார். எகிப்திலிருந்து வெளியெறிய அவர்களைச் செங்கடலைக் கடக்கச் செய்தது கடவுளின் செயலே. பாலைவனத்தில் தாகத்தைத் தீர்ப்பதற்குத் தண்ணீரையும், உண்பதற்கு உணவையும் தந்தவர் கடவுளே. அதைப்போல அமலேக்கியரை எதிர்த்து இஸ்ரயேலரை வெற்றி பெறச்செய்ததும் கடவுளே. மோசேயின் கையிலிருக்கும் கோல் கடவுளின் ஆற்றலை வெளிப்படுத்துகின்ற கோலாக செயல்பட்டு எல்லாச் சூழ்நிலைகளிலும் இஸ்ரயேலரைக் காக்கிறது. ஏலோகீம் மரபு ஆசிரியரால் எழுதப்பட்டுள்ள இப்பாடம் இஸ்ரயேல் மக்களுக்குச் சில படிப்பினைகளைக் கொடுப்பதற்காக எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக மோசேயின் வீரத்தையும் அவரது சிறப்புத்தன்மையையும் வெளிப்படுத்தும் விதத்தில் இது அமைந்துள்ளது. உயர்ந்திருந்த கை மோசேயின் உறுதியை வெளிப்படுத்துகிறது. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை உறுதியுடனும் பிரமாணிக்கத்துடனும் நிறைவேற்றுகின்ற நிலைத்தன்மையைக் காட்டுகிறது. மோசேயின் இந்த உறுதிதான் போரின் போக்கையே மாற்றுகிறது. மோசே ஒரு சிறந்த தலைவர் என்பது இந்நிகழ்வில் வெளிப்படுகிறது.

அமலேக்கியர்களுக்குஎதிரான இந்தப் போரில் ஆண்டவர் இஸ்ரயேல் மக்களின் பக்கம் நின்று அவர்கள் வெற்றிபெறச் செய்கிறார். இது மக்கள் ஆண்டவருக்கு எதிராக முணுமுணுத்தாலும், அவரது கட்டளைகளைக் கடைபிடிக்காமல் வாழ்ந்தாலும் ஆண்டவர்

நம்பிக்கையுள்ளவராக இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. பாலைவனத்தில் ஆண்டவரின் பராமரிப்பைக் கண்டுணர்ந்த இஸ்ரயேல் மக்கள் இப்போது அவரது பாதுகாப்பை அனுபவிக்கிறார்கள்; அவரது வல்லமையை இன்னும் அறிந்து கொள்கிறார்கள். போரின் இறுதியில் ஆண்டவர்; மோசேயிடம் கூறுகின்ற வார்த்தைகளும் சிந்திக்கத் தக்கவை. ஆண்டவர் மோசேயை நோக்கி, இதை நினைவு கூரும்படி ஒரு நூலில் எழுதிவை; நான் அமலேக்கியரின் நினைவை வானத்தின் கீழிலிருந்து ஒழித்திடுவேன் என்பதை யோசுவாவின் காதுகளிலும் போட்டுவை என்கின்றார். இஸ்ரயேல் மக்களின் வரலாற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ள ஐந்நூல்களை மோசே எழுதினார் என்ற எண்ணம் பல நூற்றாண்டுகளுக்கு மக்கள் நடுவில் இருந்தது. அதன் வெளிப்பாடாக ஆண்டவரின் இந்தக் கட்டளையைப் பார்க்க முடியுமா? என்ற கேள்வி எழுகிறது. ஆண்டவர் அவரை எழுதத் தூண்டுகிறார் என்பதை அறிந்தவராக மோசே இருக்கின்றார். யோசுவாவின் காதுகளிலும் போட்டுவை என்ற சொற்றொடர் மோசேயுடன் இணைந்து யோசுவா செய்ய இருக்கின்ற செயல்களைக் குறிப்பிடுவதாக உள்ளது. மோசேயின் உதவியாளராக இருக்கும் யோசுவா அவரது வாரிசாக அவருக்குப் பின் இஸ்ரயேல் மக்களை வழிநடத்துபவராகவும் இருக்கின்றார். எனவே நான் அமலேக்கியரின் நினைவை வானத்தின் கீழிலிருந்து ஒழித்திடுவேன் என்ற ஆண்டவரின் விருப்பத்தை அவரும் அறிந்தவராக இருக்கவேண்டும். வரலாற்றைப் பார்க்கும்போது யோசுவா அமலேக்கியர்களை அழித்தொழிப்பதற்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இஸ்ரயேலின் முடியாட்சி தொடங்கியபின் அரசர்களாக இருந்த சவுல் மற்றும் தாவீதின் காலங்களில் அமலேக்கியர்கள் முழுவதுமாக ஒழிக்கப்பட்டார்கள்.

அதன்பின் மோசே ஆண்டவருக்கு ஒரு பலிபீடம் கட்டி அதற்கு யாவேநிசீ என்று பெயரிட்டழைக்கின்றார். பலிபீடம் அமைப்பது கடவுளின் அருளை, ஆசிரைப் பெறுவதை நினைவுகூரும் வகையில் செய்யப்பட்டது. உதாரணமாக, அழைப்பு, உறுதிமொழி, உடன்படிக்கை போன்றவற்றை நினைவு கூர்வதற்கு பலிபீடங்கள் எழுப்பப்பட்டன. வெள்ளப்பெருக்கிலிருந்து காப்பாற்றப்பட்ட நோவா ஆண்டவருக்குப் பலிபீடம் எழுப்புகிறார் (தொநூ 8:20). ஆண்டவர் ஆபிராமை அழைத்தபோது பலிபீடம் எழுப்புகிறார் (தொநூ 12:7-8). மேலும் குலமுதுவர்களான ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரும் பலிபீடங்கள் எழுப்பி ஆண்டவர் அவர்களுக்குச் செய்த உதவிகளை நினைவு கூர்கின்றனர் (தொநூ 26:25; 35:7). பலிபீடங்கள் கடவுளைத் தொழுவதற்காக உருவாக்கப்பட்டவை. தொழுகை கடவுளுடைய பராமரிப்பு, பாதுகாப்பு ஆகியவற்றை நினைவு கூர்வது. கடவுளைத் தொழவேண்டிய அவசியம் ஏற்பட்டபோதெல்லாம் குலமுதுவர்கள் பலிபீடங்களை எழுப்பினார்கள். மோசே குலமுதுவர்களின் மரபை முன்னெடுத்துச் செல்கிறார். கடவுள் அமலேக்கியர்களுக்கு எதிராக அவர்களுக்குக் கொடுத்த வெற்றியை நினைவுகூரும் வண்ணம் பலிபீடம் எழுப்புகிறார்.

பயணம் தொடரும்...



## Solemnity of our Lord Jesus Christ, King of the Universe

Thus says the Lord,
the King of Israel, and
his Redeemer,
the Lord of hosts:
I am the first and I am
the last; besides me
there is no god.”

- Isaiah 44:6



# ஞாயிறு மறையுரை

## கிறிஸ்து அரசர் பெருவிழா

20-11-2022

மறையுரை வழங்குபவர்


அருள்முனைவர். **இ.ஸ்டேன்லி ராபின்சன்**
M.A.(Phil)., M.A.(Phil.lic).,M.A.(Chris).,Dip Pas Coun, M.Sc (Psy)., MBA., MPhil., Phd.
பங்குத்தந்தை
புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம்
பழனி, திண்டுக்கல் மறைமாவட்டம்




முதல் வாசகம் – 2 சாமுவேல் 5:1-3
இரண்டாம் வாசகம் – கொலோசையர் 1:12-20
நற்செய்தி வாசகம் – லூக்கா 23:35-43

இன்று திருஅவையானது நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே அனைத்திற்கும் அரசர் என்ற பெருவிழாவைக் கொண்டாடுகின்றது.

திருத்தந்தை 11-ம் பத்திநாதர் அவர்களால் 1925ம் ஆண்டு கிறிஸ்து அரசர் பெருவிழாவானது நிறுவப்பட்டது. இந்தக் காலக்கட்டத்தில் மதச்சார்பின்மை (Secularism) தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. மனிதர்களின் மனதிலிருந்து கடவுள் அப்புறப்படுத்திக் கொண்டிருந்தது. கடவுளை மறக்கச் செய்துகொண்டிருந்தது. கடவுளை நம்புகின்ற கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கிடையேயும் இத்தகைய எண்ணம் மேலோங்கத் தொடங்கியது. இவற்றிற்கெல்லாம் சம்மட்டியாகத்தான் திருத்தந்தை 11-ம் பத்திநாதர் இந்த கிறிஸ்து அரசர் பெருவிழாவை நிறுவி, கிறிஸ்து ஒவ்வொரு தனி நபருக்கும், குடும்பங்களுக்கும், சமூகத்திற்கும், அரசுக்கும், அனைத்து நாட்டினருக்கும் அரசராக இருக்கின்றார் என்பதை நிலைநாட்டினார். இந்த அரசரின் ஆட்சிக்கு முடிவே இராது. (லூக்கா 1:32-33)

அரசர் என்பதற்கும், அரசுரிமை என்பதற்கும் புதிய பொருளைக் கொடுத்தவர் இயேசு. அரசர் என்பவர் அடக்கி ஆள்பவர் என்ற அடிமைச் சிந்தனையை அழித்து, அரசர் அன்பு செய்பவர் என்ற புதிய சிந்தனையை இயேசு நமக்குக் கொடுக்கின்றார். அதிகாரம் என்பது ஆட்சி செலுத்துவதைவிட, பணிபுரிவது என்பதை நிலை நாட்டினார்.

இன்றைய முதல் வாசகம், கிறிஸ்து புதிய உடன்படிக்கையின் அரசர் என்ற செய்தியையும், இயேசு ஒப்புரவின் அரசர் என்ற செய்தியையும் இரண்டாம் வாசகமும் நிலை நிறுத்துகின்றன.

இயேசுவின் பிறப்பில், அரசர்களின் கேள்வியான, யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கின்றவர் எங்கே? என்பதை, இயேசுவின் இறப்பில் சிலுவையின் பெயர்ப் பலகையில் பிலாத்து நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன் என்று எழுதி அதை உறுதிப்படுத்துகின்றார்.

அரண்மனை, சிம்மாசனம், கோட்டைகள், படைவீரர்கள் என எதுவுமே இல்லாமல் வித்தியாசமான அரசாக, அரசராக செயல்படுகின்றார் நம் கிறிஸ்து அரசர். இயேசு எவ்வாறெல்லாம் அரசராக இருக்கின்றார் என்று சிந்திக்கும் போது...

- உன்னைப்போல உன் அயலாரையும், பகைவரையும் நேசி. (மத்தேயு 12:31) மேலாடை கேட்டால் உள்ளாடையையும் சேர்த்துக் கொடு (மத்தேயு 5:40) என்று சொல்வதன் வழியாக, அன்பின் அரசராக இருக்கின்றார்.

- சிலுவையில் துடிதுடித்து செத்துக் கொண்டிருக்கும்போதுகூட, தந்தையே இவர் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள், எனவே இவர்களை மன்னியும் (லூக்கா 23/34) என்று சொல்லி மன்னிப்பின் அரசராக இருக்கின்றார்.

- என்னைத் தேடிவந்த மக்கள் ஆயனில்லா ஆடுகள் போல இருக்கின்றனர். அவர்கள் பசியோடு

போகக்கூடாது என்று அவர்கள் மேல் பரிவு கொண்டு 5 அப்பங்களையும் 2 மீன் துண்டுகளையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்ததன் வழியாக பரிவின் அரசராக, இரக்கத்தின் அரசராக இருக்கின்றார்.

-பார்வையற்றவருக்குப் பார்வை, முடக்குவாதமுற்வருக்கு நடை, சீமோனின் மாமியார் காய்ச்சலிலிருந்து குணமளித்து, குணமளிக்கும் அரசராக இருக்கின்றார்.

-தொழுநோயாளர்களைக் காண்பதே அருவருப்பாக இருந்த அக்காலக்கட்டத்தில், அவர்களைத் தொட்டு குணப்படுத்தியதன் வழியாக, மனித நேயத்தின் அரசராக இருக்கின்றார்.

- செசாருக்குரியதை செசாருக்கும், கடவுளுக்குரியதை கடவுளுக்கும் கொடுங்கள் என்று சொல்லி நீதியின் அரசராக இருக்கின்றார்.

-இறுதி இராவுணவில் மண்டியிட்டு சீடர்களின் பாதங்களைக் கழுவியதன் வழியாக பணிவின் அரசராக இருக்கின்றார்.


இப்படி அன்பின், மன்னிப்பின், பரிவின், இரக்கத்தின், குணமளிக்கும், பொறுமையின், மனித நேயத்தின், நீதியின், பணிவின் அரசராக இருக்கின்ற கிறிஸ்து அரசரின் பிள்ளைகளாகிய நாம், அந்த அரசருக்குரிய மக்களாக வாழ்கின்றோமா?

1925-ம் ஆண்டு எந்த நோக்கத்திற்காக திருத்தந்தை 11-ம் பத்திநாதர் இந்த கிறிஸ்து அரசர் பெருவிழவை நிறுவினாரோ அதே நிலை இன்று இல்லையா?

உலகமயமாக்கலும், நுகர்வு கலாச்சாரும், மதச்சார்பின்மை, பண்பாட்டு மயமாக்கல் போன்ற சித்தாந்தங்கள் நம்மைக் கடவுளைவிட்டு வெகுதூரத்திற்கு எடுத்துக் சென்று கடவுளை மறக்கடிக்கச் செய்கின்றன. இவை அனைத்துச் சித்தாந்தங்களிலிருந்து மீண்டு, இறைவனின் ஆட்சி என்பது உண்பதும் குடிப்பதுமல்ல, மாறாக அன்பு, உண்மை, நீதி, பாசம், மன்னிப்புப் போன்ற மதிப்பீடுகளால் அமைந்த ஒன்று என்பதை நாம் உணர இந்த விழா நமக்கு அழைப்புவிடுக்கின்றது.

கிறிஸ்து அரசர் நம் உள்ளங்கள், இல்லங்கள், சமுதாயம், நாடு மற்றும் அனைத்துலகின் அரசராக இருக்கின்றார். இந்த அரசரிடம் இருக்கும் உண்மை, அன்பு, நீதி, மன்னிப்பு, விட்டுக்கொடுத்தல் போன்ற இறையாட்சியின் விழுமியங்களை நமதாக்கி நாமும் இந்த பண்புகளின் அரசர்களாக, அரசிகளாக வாழ்வோம்.

- ஆமென்




rawpixel



# அனைத்துக்கும் அரசராம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து

2 சாமு 5:1-3, கொலோ. 1:12-20, லூக். 23: 35-43

**20-11-2022**




பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

அகமாகி புறமாகி ஆனந்தமயமாகி, சுகமாகி சுவையாகி சுந்தர மொழியாகி, பகலாகி இரவாகி பாசமுள்ள உறவாகி, நிலவாகி ஒளியாகி நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் நம் இயேசு ராஜாவை கொண்டாடி மகிழ கூடி வந்துள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

திருவழிபாட்டின் இறுதி வாரத்தில், கிறிஸ்து அரசர் பெருவிழாவினை கொண்டாடி மகிழ, கிறிஸ்து ராஜாவின் இறையாட்சிக்கு உட்பட்ட இறை மக்களாகிய நம்மை, திருஅவை அழைத்துள்ளது.

கடவுள் இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை விடுவித்து, தம் அன்பார்ந்த மகனின் ஆட்சிக்கு உட்படுத்த தயாராய் இருக்கிறார். நாம் இருளில் இருந்து வெளிவரத் தயாரா? என்ற கேள்வியை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய வழிபாடு.

ஆண்டவராகிய கடவுள், தாவீதின் அரியணையை, தம் திருமகன் இயேசுவுக்கு அளித்து, அவரை இந்த பிரபஞ்சத்திற்கே அரசராக்கினார். முறை செய்து காக்கும் மன்னரான இயேசு கிறிஸ்து அன்பை ஆயுதமாகவும், கொடுப்பதை கொள்கையாகவும், மன்னிப்பதை அதிகாரமாகவும் கொண்டு இந்த பிரபஞ்சத்தை பரிபாலித்து வருகிறார்.

ஒடுக்கப்பட்டோர், புறக்கணிக்கப் பட்டோர், எளியோர், வறியோர் ஆகியோரைத் தேடி வந்து கட்டியணைத்து, தன் தந்தையின் அன்பினை வாரிவழங்க கிறிஸ்து அரசர் காத்திருக்கிறார். நிம்மதி இழந்து தவிக்கும் இல்லங்களுக்கு வருகைதந்து, மீட்பினை வழங்கத் தயாராய் இருக்கிறார். நல்ல கள்வனைப் போல் மனம் மாறிய மனிதர்களுக்கெல்லாம் தனது ஆட்சியில் நிலையான பேறு வழங்க காத்திருக்கிறார்.

நீரே எங்களது ஆயனாக இருப்பாய். நீரே எங்களுக்கு தலைமை தாங்குவாய் என்று கிறிஸ்து ராஜாவை இருகரம் நீட்டி வரவேற்போம். அவர் நம் உள்ளத்தில் அரியாசனம் போட்டு அமர்ந்து இயங்க, நம்மை இயக்க இடமளிப்போம். இறையாட்சியின் விழுமியங்களான எளிமை, பிறரன்பு, இறையன்பு, விசுவாசம், விடாமுயற்சி, தாழ்ச்சி, மனிதநேயம் ஆகியவற்றை நம் வாழ்வாக்கிட வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

இஸ்ரயேலின் அரசனான சவுலுக்குப் பின் தாவீதை மக்கள் தேர்ந்தெடுத்ததை விவரிக்கின்றது இன்றைய முதல் வாசகம். தாவீது இஸ்ரயேலின் அரசராக திருப்பொழிவு பெறுகிறார். தாவீதினுடைய வழித் தோன்றலாகிய இயேசுவும் திருப்பொழிவு பெறுவதாக உணர்த்துகின்ற இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

தூய பவுல் கிறிஸ்துவின் மீட்புப் பணியை தெளிவாக எடுத்துரைக்கும் பகுதி இன்றைய இரண்டாம் வாசகமாக அருளப்பட்டுள்ளது. கிறிஸ்துவே அனைத்தையும் நிலைக்கச் செய்பவர், திருச்சபையின் தலைவர், அனைத்தையும் படைத்தவர், கடவுளோடு நம்மை ஒப்புரவாக்குபவர் என்று கிறிஸ்துவின் மேன்மையை வெளிப்படுத்தும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) திருச்சபையின் உடலுக்கு தலையும் தொடக்கமுமான தந்தையே இறைவா, உலக மாந்தரை இருளின் அதிகாரத் திலிருந்து விடுவித்து, கிறிஸ்து அரசரின் ஆட்சிக்கு உட்பட்ட மக்களாய் வாழ அரும் பணி ஆற்றிவரும் உம் திருஅவை யின் தலைமை ஆயர் தொடங்கி பொது நிலையினர் வரை அனைவரையும் உம் திருப்பாதங்களில் அர்ப்பணிக்கின்றோம். அவர்களது ஆன்மீகக் கருத்துக்கள் ஈடேற்றம் அடைய அருள்தர வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.

2) இருளின் அதிகாரத்திலிருந்து எம்மை விடுவித்து, தம் அன்பார்ந்த மகனின் ஆட்சிக்கு எம்மை உட்படுத்துகின்ற தந்தையே இறைவா, அதிகாரத்தை கையில் கொண்டுள்ள இன்றைய அரசியல் தலைவர்கள், அவர்களை இயக்கக்கூடிய பெருமுதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் இவர்கள் யாவரும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயல்படவும், அறம் இல்லாதவற்றை செய்யாமல், அறநெறி பிறழாமல், நீதி வழுவாமல், சமுதாயம் வாழ்வு பெற தம்மையே முன்னிலை படுத்துபவர்களாக செயல்பட அருள் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) நம்பிக்கையின் நாயகனே இறைவா, எமது பங்கில் உள்ள இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் வாழ்வின் அர்த்தத்தை புரிந்து கொண்டு வாழவும், நாளும் நேர்மையுடன் உலகை அணுகவும் அருள் தாரும். அவர்கள் தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல், தடைகளைக் கண்டு மலைத்து நிற்காமல், குழப்பங்களைக் கண்டு விரக்தியடையாமல் வெல்வோம், சாதிப்போம் என்ற தன்னம்பிக்கையுடன் வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

உடல் தளர்ந்து, உள்ளம் தளர்ந்து, வயது கடந்து நின்ற சாராள் வாழ்வில் வசந்தம் தந்த இறைவா, சருகாகிப்போன எலிசபெத்தாள் வாழ்வை மீண்டும் துளிர்க்கச் செய்த முதல்வா. குழந்தை இன்றி தவிக்கும் தம்பதியரை உம் கருணை கண்கொண்டு பாரும். அவர்களை நிறைவாக ஆசீர்வதித்து, அவர்களுக்கு பிள்ளைப்பேறு தந்து பேறுடையாள் என்று இந்த புவனம் போற்ற அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## திரு.வி.க.வின் கிறிஸ்து மொழிக் குறள்



**பானரி அணைவான் என்றும் பார்பதம் படியே என்றும்**
**இரவிலும் நினைந்தேன் நெஞ்சம் ஏந்திய காட்சி என்ன!**
**சிரமுடி முள்ளும் மண்ணில் சேவடி நடையும் – ஏசு**
**பரமன்நீ என்று கொண்டேன் பதமலர் போற்றி போற்றி**

இறைவனுடைய சிங்காசனம் வானம் (மத். 5:34). உலகம் அவருடைய பாதப் படியாகும் (மத். 5:35). இரவில் வடிவம் இல்லாமல் தூய ஆவியாய் விளங்கும் இறைவனை நினைந்தேன் (யோவா. 4:24). என் மனதில் நிலைபெற்ற காட்சி எது? தலையில் முள் முடியும், மண்ணில் நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்த செம்மையான திருவடிகளின் நடையும் கொண்ட வடிவம் என்னுள் நிலையாக நின்றது. எனவே, இயேசுவே நீயே இறைவன் என்று அறிந்து கொண்டேன். உம்முடைய மலர் போன்ற திருவடிகளுக்கு வணக்கம். வாழ்க.



# திருக்குறள் வழங்கும்
# சமூக நெறிச் சிந்தனைகள்


சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM




## குறள் –20

**நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு**

### குறள் விளக்கம்

எப்படிபட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

### சிந்தனை

பணக்காரர் ஒருவர் சிலை ஒன்றை வாங்க சிற்பியை அணுகினார். ஏழையான அவர் கோபுரத்தின் நான்காம் தளத்தில் வைப்பதற்காக அம்மன் சிலை ஒன்றை செதுக்கிக் கொண்டிருந்தார். அந்த சிலையைப் போலவே மற்றொரு அம்மன் சிலையும் அங்கிருந்ததை பணக்காரன் கவனித்தார். ஒரே கோவிலுக்கு இரண்டு அம்மன் சிலைகள் செய்கிறீர்களே... ஏன்? என்று கேட்டார் பணக்காரர். கவனக் குறைவால் அந்த சிலையின் மூக்கில் சிறு கீறல் விழுந்துவிட்டது. எனவே இன்னொன்றை செய்கிறேன் என்றார். சிறு கீறல் தானே நான்காவது தளத்தில் இதை யார் கவனிக்கப் போகிறார்கள் என்றார்; பணக்காரர். அதற்கு ஏழை சிற்பி, மற்றவர்கள் கண்ணுக்கு தெரியாது என்பது என்னவோ உண்மைதான். ஆனால் நான் அந்த இடத்தை கடக்கும் போதுதெல்லாம் அது என்னை உறுத்துமே என்றார் சிற்பி.

பிறருக்காக செயல்படுவது ஒழுங்கன்று. தன் மனசாட்சிக்கு உறுத்தல் ஏற்படாதவாறு உண்மையாக வாழ்வதே ஒழுக்கம் என்கிறது இக்கதை. இதையே திருவிவிலியமும், வறுமையினால் பாவம் செய்வதினின்று தடுக்கப்படுவோர் உண்டு: அவர்கள் மன வறுத்தலின்றி ஓய்வு கொள்வார்கள் சீஞா.20:21 என்கிறது. மேலும் வறுமையிலேயே பெருமை பெறுவோர் செல்வ செழிப்பில் எத்துணை பெருமை அடைவர் என்கிறது சீராக்கின் ஞானம் 10:31.

அவன் ஏழையாக இருந்தபோதும் நேர்மையாக இருந்தான் என சாதாரணமாக கூறுவதுண்டு. சு+ழ்நிலை மனிதனை நெறிபிறழச் செய்யும் சக்தி படைத்தது. ஏழ்மை என்ற சாதகமற்ற சு+ழ்நிலையில் ஒருவன் இருந்தபோதிலும் நேர்மையை கடைபித்தான் என்பது சிறப்பான செயல். இதனையே வறுமையில் ஒழுக்கம் அழகு என்பர். நான் வறுமையுற்றால், திருடனாகி என் கடவுளின் திருப்பெயருக்கு இழிவு வருவிக்க நேரிடும் என்கிறது நீதிமொழிகள் 30:9. வளமைக்கு காரணமான மழை பொய்த்தால் வறுமை மேலோங்கி ஒழுக்கம் கெட்டு அதனால் கடவுளின் பெயருக்கும் இழுக்கு உண்டாகிவிடும்.

தந்தை பெரியார், ஒழுக்கம் என்பது சொல்லுகின்றபடி நடப்பதும், நடந்தபடி சொல்லுவதுமே ஒழிய தனிப்பட்ட குணம் அல்ல என்பார். சொல்லும் செயலும் வெவ்வேறாயின் அவரை யாரும் மதிக்க மாட்டார்கள். எனவே எச்சூழ்நிலையிலும் சொல்லும் செயலும் ஒன்றி வாழ்வோம்.



# அகில உலக திருஅவைச் செய்திகள்

வழங்குபவர்
திரு.வி.பி.ஆர்.கோவை

காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பின் (UNFCCC) ஓர் அங்கமான COP எனும் Company Of Parties என்ற அமைப்பானது எகிப்து நாட்டின் Sham Al Shiekh நகரில் உள்ள அகில உலக மாநாட்டு மையத்தில் COP27 என்ற பெயரில் கடந்த நவம்பர் 6 முதல் உலக வெப்பமையமாதல் குறித்த தனது மாநாட்டினை நடத்தி வருகிறது. அம்மாநாட்டின் இரண்டாம் நாளன்று வாழ்த்துரை வழங்கி பேசிய ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் திரு. Antonio Geterres பேசும் போது, புவி வெப்பமயமாதலை தடுக்க நாம் முன்னெடுத்திருக்கும் இப்போராடத்தின் வெற்றியும் தோல்வியும் இந்த பாத்தாண்டடுகளுக்குள் தீர்மானிக்கப்பட்டுவிடும். எனவே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நமது 8 பில்லியன் மனித குடும்பத்திற்காகவும் வரும் எதிர்கால சந்ததிகளுக்காகவும் போராடுவோம், வெற்றிபெறுவோம் என்றார். இம்மாநாடு தொடர்பான தனது அறிக்கையில் நம் பாப்பரசர் அவர்கள் COP27 மாநாட்டில் முன்னெடுக்கப்படும் முடிவுகள் தைரியமானதாகவும் உறுதியுடனும் அமைவதாக என குறிப்பிட்டுள்ளார்.

உலக சன்னி முஸ்லிம்களின் தலைவரான மதிப்பிற்குரிய Ahmed el-Tayeb அவர்கள் அப்பாவி மக்களின் உயிர்களை காக்கும் பொருட்டு Russia - Ukrainian, போர் முடிவுக்கு வரவேண்டும் அதில் சம்மந்தப்பட்ட நாடுகள் ஒன்றாக அமர்ந்து கூடி வாதிட்டுப்பேசி வெற்றிக்கான கொடியினை ஏற்றாமல் சமாதானத்திற்கான கொடியினை ஏற்றட்டும் என குறிப்பிட்டு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கென்யா நாட்டில் கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பாக மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தனது வாழ்வினை அர்ப்பானித்து பணியாற்றி மரைந்த அருட்சகோதரி Maria Carola என்பவர் தற்போது பரிசுத்தப்படுத்தப்பட்டதாக அன்னாட்டு கிறித்துவ செய்திகள் கூறியுள்ளன.

வத்திக்கான் பணிகளின் பல துறைகளிலும் சமீப காலமாக நிறைய படித்த பட்டங்களை பெற்ற பணி அனுபவம் மிக்க பெண்கள் பணி நியமனம் பெற்று வருகின்றனர் என்று வத்திக்கான் செய்திகள் கூறுகின்றன.

சிறுபான்மை மக்களின் சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் ஒன்றிணைந்து நிறைவேற்றிய தீர்மானத்தில் நமது இந்திய அரசும் கையெழுதிட்டுள்ளது. ஆயினும் அதனை இந்தியா விரைவில் அங்கீகரிக்க வேண்டுமென ஐ நாவின் மற்ற உறுப்பு நாடுகள் இந்தியாவை கேட்டுக்கொண்டுள்ளன.

பெங்களூரு நகரில் இந்திய கத்தோலிக்க ஆயர்களின் 33வது முழுமையான மாநாட்டு கூட்டத்தினை துவக்கி வைத்து உறையாற்றியப்போது நம் பாப்பரசரின் தூதுவர் பேராயர் Nuncio Leopoldo அவர்கள் மதங்களுக்கு இடையேயான நல்லிணக்க உரையாடல்களில் கிறித்துவர்கள் அதிகம் ஈடுபடவேண்டும் அப்போது கலாச்சார ஒற்றுமைகள் அதிகரித்து சமாதானம் முக்கியத்துவம் பெறும் என்றார்.

நமது இந்திய கத்தோலிக்க திருசபையானது முறையே இலத்தீன் சபை, சீரோ மலபார் சபை மற்றும் சீரோ மலங்கார சபை என மூன்று வெவ்வேறு பிரிவுகளை உள்ளடக்கியது. இதில் தற்போது பெங்களூரு நகரில் நடைபெற்று வரும் மாநாட்டில் சீரோ மலபார் சபையினை சார்ந்த பேராயார் Andrews Thalahath என்பவர் புதிய அதிபராக தேர்வு பெற்றுள்ளார்.

மியான்மரில் நடைபெற்று வரும் ராணுவ ஆட்சியில் இதுவரை ஏறக்குறைய 92 மதம் சார்ந்த கோவில்களும் வழிபாட்டு தளங்களும் அழிக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்டும் உள்ளன. அதில் பெரும்பான்மையான கிறித்துவ கோவில்களும் அடங்கும்மென வத்திக்கானில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.



# கிறிஸ்து அரசர் பெருவிழா

**20.11.2022 முதல் 26.11.2022**

**20.11.2022 – ஞாயிற்றுக்கிழமை**

**கிறிஸ்து அரசர் பெருவிழா**

முதல் வாசகம் : 2 சாமுவேல் 5:1-3

இரண்டாம் வாசகம் : கொலோசையர் 1:12-20

நற்செய்தி : லூக்கா 23:35-43

**21.11.2022 – திங்கட்கிழமை**

முதல் வாசகம் : திருவெளிப்பாடு 14:1-3. 4-5

நற்செய்தி : லூக்கா 21:1-4

**22.11.2022 – செவ்வாய்க்கிழமை**

முதல் வாசகம் : திருவெளிப்பாடு 14:14-19

நற்செய்தி : லூக்கா 21:5-11

**23.11.2022 – புதன்கிழமை**

முதல் வாசகம் : திருவெளிப்பாடு 15:1-4

நற்செய்தி : லூக்கா 21:12-19

**24.11.2022 – வியாழக்கிழமை**

முதல் வாசகம் : திருவெளிப்பாடு 18:1-2, 21-23, 19:1-3, 9V

நற்செய்தி : லூக்கா 21:20-28

**25.11.2022 – வெள்ளிக்கிழமை**

முதல் வாசகம் : திருவெளிப்பாடு 20:1-4, 11-21:2

நற்செய்தி : லூக்கா 21:29-33

**26.11.2022 – சனிக்கிழமை**

முதல் வாசகம் : திருவெளிப்பாடு 22:1-7

நற்செய்தி : லூக்கா 21:34-36



“He who trusts in himself is lost.
He who trusts in God can do all things.”

- St. Alphonsus Liguori -